

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர் கழக செயலாளர் பெரி.பாலா ஏற்பாட்டின் பேரில் கழக தலைவர் தளபதி அவர்கள் ஆணையின்பேரில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் கே ஆர். பெரிய கருப்பன் சிறப்புரை ஆற்றினார். மேடையில் முன்னாள் அமைச்சர் மு.தேன்னவன், தலைமைக் கழக பேச்சாளர் பேராசிரியர் சேவகபெருமாள், இளம் பேச்சாளர் கு. சுமித்ரா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் மற்றும நகர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், மு. க. ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, தூத்துக்குடி கலைஞர் அரங்கில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து செயற்குழு கூட்டத்தில் சிறப்புரையாற்றினார். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்கண்டேயன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட துணை செயலாளர் ராஜ்மோகன் செல்வின், ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், கி.ராதா கிருஷ்ணன், புதூர் ராதா கிருஷ்ணன், மும்மூர்த்தி, சின்னமாரிமுத்து, கருப்பசாமி, பொதுக்குழு உறுப்பினர் ரமேஷ், அன்புராஜன், நகர்மன்ற உறுப்பினர் தவமணி வடக்கு மாவட்ட திமுக உறுப்பினர்கள் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### தருமபுரிக்கு ‘சிப்காட்’ கேட்கும் பா.ம.க. செய்யாறுக்கு வேண்டாம் என்பதா?

# மக்களை ஏமாற்ற பா.ம.க. இரட்டை வேடம் போடுவதா?

## திருவண்ணாமலை பொதுக்கூட்டத்தில் அமைச்சர் எ.வ. வேலு கேள்வி!

திருவண்ணாமலை, மே 18-

“தருமபுரிக்கு ‘சிப்காட்’ கேட்கும் பா.ம.க. செய்யாறுக்கு வேண்டாம் என்பதா? மக்கள் ஏமாற்ற பா.ம.க. இரட்டை வேடம் போடுகிறது” என்று திருவண்ணாமலை பொதுக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ. வேலு பேசும் போது கேள்வி எழுப்பினார்.

திருவண்ணாமலை, வேட்டவலம் சாலை, திருவள்ளுவர் சிலை அருகில். நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு! திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக சார்பில் திராவிட மாடல் அரசின் நான்காம் ஆண்டு நிறைவு மற்றும் ஐந்தாம் ஆண்டு தொடக்க விழா நடைபெற்றது.

விழாவிற்கு கழக தணிக்கைக்குழு உறுப்பினரும், சட்டப்பேரவை துணைத் தலைவருமான கு.பிச்சாண்டி அவர்கள் தலைமை வகித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் செங்கம் மு.பெ.கிரி, கலசப்பாக்கம் பெ.சு.தி.சரவணன், வந்தவாசி எஸ்.அம்பேத்குமார், செய்யாறு ஒ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி. அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

திராவிட மாடல் அரசின் ஐந்தாமாண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்டு கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

இந்தியாவில் பல மாநிலங்கள் இருக்கின்றது, ஒரு மாநிலம் பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் என்று சொன்னால் தனி மனிதனுடைய பொருளாதாரம் உயர்ந்திருக்க வேண்டும். தனி மனிதன் நிலை உயர்ந்தால்தான் மாநிலத்தின் நிலை உயரும். நமது பக்கத்தில் இருக்கிற தெலுங்கானா 6.7 சதவீதம், பணக்கார மாநிலம் என்று சொல்லப்படுகிற மும்பையை உள்ளடக்கிய மகாராஸ்டிரா 7.20 சதவீதம், கர்நாடகா மாநில வளர்ச்சி 7.3 சதவீதம், அரியானாவின் பொருளாதார வளர்ச்சி 7.55 சதவீதம், இராஜஸ்தான் மாநிலம் 7.82 சதவீதம், ஆந்திரபிரதேசம் 8.21 சதவீதம், பீகார், உத்திரபிரதேசம் எல்லாம் பொருளாதார வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய மாநிலங்களாகும். இந்தியாவிலேயே பொருளாதாரத்தில் 9.69சதவீதம் பெற்று முன்னிலையில் இருக்கிற ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுந்தான்.

**வெளிநாடுகளிலும் காலை உணவுத் திட்டம்!**

தமிழக முதல்வர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கே.கே.நகர் ஒரு பள்ளியில் ஒரு நிகழ்ச்சிக்கு செல்லுகிறார். அங்குள்ள ஒரு மாணவன் சோர்வாக இருப்பதைப் பார்த்து என்ன உடம்புக்கு விசாரிக்கிறபோது, நான் காலை உணவு உண்ணவில்லை, காரணம் என் தாயார் 4, 5 வீடுகளில் வீட்டு வேலை செய்கிறார். அதனால் அவர் விடியற்காலையிலேயே வேலைக்கு சென்று விடுவார், எனக்கு தந்தை இல்லை என்று அந்த மாணவன் சொன்னபோதுதான், அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் எண்ணத்தில் உதயமானதான் காலை உணவு திட்டம். அமெரிக்கா நாட்டின் அருகில் உள்ள கனடா நாட்டில், நம்மைப் பார்த்து இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளார்கள். இலங்கை பிரதமரும் இலங்கையில் இனி காலை உணவு திட்டம் அமுல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் தாயுள்ளத்தோடு நமது முதல்வர் செயல்படுவதால் இந்த திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. கைத்தறி இருந்தால் 300, விசைத்தறியாக இருந்தால் 1000 யூனிட் மின்சாரம் இலவசமாக தரப்படுகிறது. நமது மக்களின் தேவைகளை தமிழ்நாடு முதலமைச்சர் உணர்ந்திருப்பதால் நமது பொருளாதாரம் உயர்ந்து வருகிறது. திருவண்ணாமலை நகராட்சி 100 ஆண்டுகளை கடந்திருக்கிறது. அதனால் நமது முதல்வர் மாநகராட்சியாக தரம் உயர்த்தி இருக்கிறார். செங்கம் மற்றும் போளூர் ஆகிய பேரூராட்சிகளை நகராட்சிகளாக தரம் உயர்த்தி இருக்கிறார்.

மகளிர் விடியல் பயணத்தில் நமது திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.171 கோடி செலவில் 10.85கோடி முறை நம்முடைய அன்பு சகோதரிகள் பயணம் செய்துள்ளார்கள். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை 4,13,095 குடும்பங்களுக்கு நம்முடைய மாவட்டத்தில் வழங்கப்பட்டு வருகிறது. ரூ.5,125கோடி வங்கிக் கடனை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக வழங்கப்படுகிறது.

மகப்பேறு கால விடுப்பு 9 மாதத்திருந்து 12 மாதங்களாக மாற்றப்பட்டுள்ளது. 1,730 பள்ளிகளில் 83,393 மாணவர்கள் இன்றைக்கு காலை உணவுத்திட்டத்தில் பயன் பெறுகிறார்கள். நம்முடைய மாவட்டத்தில் 476 கல்லூரி சார்ந்த மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டத்தில் மாதம் ரூ.1000 அளிக்கப்படுகிறது. 15,696 மாணவிகள் இந்த நிதியைப் பெறுகிறார்கள். நம்மைக் காக்கும் 48, இன்னுயிர் காக்கும் இனியத் திட்டம் உலகில் எங்கும் கிடையாது. ரூ.9கோடியே, 44லட்சத்து, 75 ஆயிரம் ரூபாய் செலவில் 15ஆயிரத்து, 595 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது.



**போளூர் பகுதி மக்களின் கனவை நிறைவேறுகி றது!**

மக்களைக் காக்கும் மருத்துவம், கலைஞர் ஒருங்கிணைந்த அனைத்து கிராம வேளாண்மைத்திட்டம், முதலமைச்சரின் கிராம சாலைத் திட்டம் இப்படி பல திட்டங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கருணை ஆட்சியில் நமது மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர், ஆரணி உட்பட 8 தொகுதிகளையும் எனது சொந்த தொகுதியாக பார்க்கிறேன். ஒரு மாவட்டத்தின் எல்லா பகுதிகளும் வளர்ச்சி சிராக இருந்தால்தான் நாடு உயரும். போளூரில் 30கோடி செலவில் இன்று திறக்கப்பட்ட இரயில்வே மேம்பாலம் அப்பகுதி மக்களின் பல ஆண்டு கால கனவு. அதை நிறைவேற்றி இருக்கிறோம்.

**எனது சக்திக்கு மீறி பாடுபட்டு வருகிறேன்!**

திருவண்ணாமலைக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினசரி வருகிறார்கள். இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற பொறுப்பில் எனது சக்திக்கு மீறு நான் பாடுபட்டு வருகிறேன். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள தீபம் நகரிருந்து செங்கம் செல்ல புறவழிச்சாலை விரைவில் தொடங்க உள்ளது. கூடுவாஞ்சேரியிலிருந்து செய்யாறு சிப்காட்டிற்கு நான்கு வழிச்சாலை அமைக்கப்படுகிற நிலையில், திருவண்ணா மலை முதல் செய்யாறு வரை நான்கு வழிச்சாலை இந்தாண்டே அமைக்கப்படும்.

சிப்காட் கொண்டுவந்தால் எல்லோருக்கும் வேலைக் கொடுக்கலாம் என்ற அன்புமணி கூறுகிறார். அவருடைய மனைவி சௌமியா அன்புமணி நாடாளுமன்ற தேர்தலில் நின்றபோது, நான் பெற்றிபெற்றால் தருமபுரியில் சிப்காட் கொண்டு வருவேன் என்று கூறினார். செய்யாறு பகுதியில் தரிசு நிலங்கள் அதிகம் இருக்கிறது.

எங்கள் நிலங்களை எடுத்துக் கொண்டு பணம் கொடுங்கள் பொதுமக்கள் கேட்கிறார்கள். அதனால் அப்பகுதியில் தொழிற்பேட்டை அமையயிருக்கிறது. ஆனால் அங்கு என் உருவ பொம்மையை கொளுத்தி விட்டு, கொடும்பாவி எரிக்கிறேன் என்று சொல்லுகிறார்கள். இதனைக் கண்டு திமுக அஞ்சாது. தருமபுரியில் சிப்காட் கேட்கிற பாமக செய்யாறுக்கு வேண்டாம் என்கிறார்கள்.

பா.ம.க.விற்கு இரட்டை நாக்கா என்று சட்டமன்றத்திலேயே ஜி.கே.மணியை பார்த்துக் கேட்டேன்.

**மணி மண்டபம்!**

அவர்கள் இடஒதுக்கீடு கேட்டு அதிமுக ஆட்சியில் அதாவது எம்.ஜி.ஆர். ஆண்டபோது போராடினார்கள். அப்போது நடந்த துப்பாக்கி சூட்டில் 21பேர் மாண்டு போனார்கள். அந்த 21பேருக்கும் நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் மணி மண்டமும், சிலையும் அமைத்தார்.

அந்த சிலையை அமைத்தது நான் சார்ந்த பொதுப்பணித்துறைதான். 21பேரின் புகைப்படங்களையும் தேடி கண்டறிந்து, சிலைகளை செய்வ தற்கான வாய்பை எனக்களித்தவர் நமது முதல்வர் அண்ணன் மு.க.ஸ்டாலின் தான். இப்படி எல்லோருக்கும், எல்லாமும் கிடைக்க வேண்டும் என்பதுதான் திராவிட மாடல் ஆட்சி.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார்.

பொதுக்கூட்டத்தில் கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன், அவைத் தலைவர் கோ.கண்ணன், வடக்கு மாவட்ட அவைத்தலைவர் ஆர்.ராஜசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொன். முத்து, ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, கே.வி. ராஜ்குமார், ஆர்.வேல்முருகன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர்கள் எஸ். பன்னீர்செல்வம், டி.ஏ.தட்சணா மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டு ரங்கன், ப்ரியா ப.விஜயரங்கன், க.லோக நாதன், விஜய லட்சுமிரமேஷ், ஜெயராணி ரவி, மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே. வி.சேகரன், கோ.எதிரொலி மணியன் தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன்.தனுசு, எச்.சாதிக் பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர்.பிரவீன் ஸ்ரீதரன், சி.பி.பாலமுரளி கிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர். எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம் சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம்,

வடக்கு மாவட்டம் எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், இ.எஸ்.டி.கார்த்திகேயன், ஏ.என்.சம்பத், என்.கே.ஏ. பாபு, அ.மணி கண்டன், மா.ஏழுமலை, தொ.ப.சீ. மதிவாணன், பி.செல்வ ராஜன், சாது.ஆனந்த், க.சீனுவாசன், ஜி.பி.அசோக், டாக்டர் மகேந்திரன், இ.மணி கண்டன், மாலினிவினோத் திவாகரன், ஐ.எஸ்.அமானுல்லா, ஆர்.ராம்ரவி, ப.க.மணிவண்ணன், அமர் (எ) இப்ராஹிம் ஷெரீப், அப்சல்பாஷா, கே.ஏ.புஷ்பராஜ், பி.எஸ்.சாந்தகுமார், இராணிவெங்கடேசன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர். சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராம ஜெயம், த.செந்தில்குமார், அ. ஏழுமலை, த.மனோகரன்,

வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிரமணியன், பி.மனோகரன், ஏ.எழில் மாறன், கே.டி.ராம சாமி, என்.டி.மனோகரன், எஸ். எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ்.மோகன், துரை. மாமது, ஏ.ஞானவேல், என். சங்கர், எம்.தினகரன், ஜெ. கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிடமுருகன், எஸ்.ரவிக்குமார், டி.ராதா, ப.இளங்கோவன், ஏ.சுந்தரேசன், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர். பெருமாள்,

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா. பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு. இளங்கோவன், அன்பரசி ராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பி னர்கள் ஏ.சிவி.தயாநிதி, ஏ.எம்.காசி, எம்.கிருஷ்ண மூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்த குமார், அப்சர்லியாகத் பாஷா,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம். சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி.கே.மோகன், கே. கோவர்தணன், வேணிஏழுமலை மற்றும் மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன்,

நகராட்சி தலைவர்கள் எச்.ஜலால் மற்றும் திருவண்ணாமலை மாநகர பகுதி பொறுப்பாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.எஸ்.சண்முகம், பா.ஷெரீப் உட்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக, வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் நன்றி கூறினார். முன்னதாக மாவட்ட திமுக கலைக்குழு அம்பேத்கரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி, 5 வது வார்டுக்குட்பட்ட ஐசக் தெருவில் ரூ. 4.60 இலட்சம் மதிப்பீட்டில் கல்வெட்டு, அலங்கார தரை கற்கள் மறுசீரமைப்பு, கான்கிரீட் தளம் அமைக்கும் பணி, 36–வது வார்டுக்குட்பட்ட சரலூர் ஆற்றங்கரை சாலையில் ரூ. 4.60 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, 50 வது வார்டுக்குட்பட்ட முகிலன்விளை – சுவிஷேசபுரம் சாலையில் ரூ. 38.70 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி மற்றும் 47 வது வார்டுக்குட்பட்ட ரஹ்மத் கார்டன் பள்ளி வாசல் அருகில் ரூ. 2.10 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால், சிறு பாலம் அமைக்கும் பணி ஆகிய பணிகளை மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார். நிகழ்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஜவகர், ராஜசீலி, ஜெனிதா, ரமேஷ், ஐயப்பன், ப.ஆனந்த், த.ஜீவா, என்.பி.துரை, மு.சேக்மீரான் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### 20ம் தேதி - முன்னாள் அமைச்சர்

# பசும்பொன் தா.கிருட்டினனின் 22ஆவது ஆண்டு நினைவு தினம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் தி.மு.க.வினர் மரியாதை!

சிவகங்கை, மே 18 -

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா கொம்புக்காரனேந்தலில் பிறந்தவர் பசும்பொன் தா.கிருட்டினன். மாணவப்பருவம் முதல் கழக வளர்ச்சிக்காக தென் மாவட்டங்களில் அயராது பணியாற்றியவர். கழக அமைப்பு செயலாளர் மாவட்ட கழக செயலாளர் மற்றும் நாடாளுமன்றம், மேலவை உறுப்பினர் மற்றும் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினராகவும், மானாமதுரை ஒன்றிய குழு தலைவராகவும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சராகவும் இருந்தவர்.

இவர் கடந்த 20.5.2003 ம் ஆண்டு மறை வெய்தினார். அவரது நினைவிடம் மானாமதுரை தாலுகா கொம்புக்காரனேந்தலில் உள்ளது. ஆண்டு தோறும் சிவகங்கை மாவட்ட கழகம், பசும்பொன் தா.ரா. மற்றும் குடும்பத்தினர் சார்பில் மே மாதம் 20ம்தேதி மலரஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தப்படுகிறது.

இதுகுறித்து மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறிஉள்ளதாவது.

இந்த ஆண்டு வருகிற 20ஆம் தேதி செவ்வாய்க் கிழமை பசும்பொன் தா. கிருட்டிணன் அவர்களின் 22வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கொம்புக்காரனேந்தலில் அவரது நினைவிடத்தில் எனது தலைமையில் மலரஞ்சலி மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இத்தகவலை மாவட்ட செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை

# நெல்லை கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் அறிக்கை



நெல்லை,மே18-

தென்கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நெல்லை கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் முதலமைச்சர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின் படி இன்று (18.05.2025 ஞாயிற்றுகிழமை)காலை 11 மணி அளவில் பாளையங் கோட்டை கே.டி.சி.நகர் ரவுண்டானா அருகில் உள்ள காப்பர் லீப் ஹோட்டல் கூட்டரங்கில் மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம் பெல் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழக துணை பொதுசெயலாளர் நாடாளுமன்ற குழு துணை தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில அணி நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பேரூர் கழகச் செயலாளர்கள் மாவட்ட அணி அமைப்பாளர்கள் தவறாது பங்கேற்று கருத்துகளை வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:1.03.05.2025 அன்று நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்கள் தலைமையில் 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள்.

ஜூன் 1 மதுரையில் நடைபெற உள்ள பொதுக் குழு கூட்டம். ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்தநாள் நிகழ்ச்சி.கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.